**செய்தி வெளியீடு** **நாள் : 14.07.2024**

**வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 2024-25ஆம் ஆண்டு அறிவித்த அறிவிப்புகளின் திட்டங்களை செயல்படுத்தும் வகையில் 5 சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு திட்டப் பணிகளை**

**மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று களஆய்வு செய்தார்.**

********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (14.7.2024) பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி, எம்.கே.பி. நகர், சென்ட்ரல் அவென்யூ சாலையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் சமுதாய நலக்கூடம் அமையவுள்ள இடத்தினை மாண்புமிகு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு களஆய்வு செய்தார்.

**மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது** :

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய** தொலைநோக்கு திட்டமான வடசென்னை வளர்ச்சித் திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பணிகள் குறித்தும், குறிப்பாக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் குறித்தும் தொடர் ஆய்வு நடைபெற்று வருகிறது. இந்த வளர்ச்சித் திட்ட பணிகளுக்கு உறுதுணையாக இருக்கின்ற துறையினுடைய செயலாளர் திருமதி.காகர்லா உஷா அவர்களும், துறையினுடைய உறுப்பினர் செயலாளர் திரு.அன்சுல் மிஸ்ரா அவர்களும் இந்த திட்டப் பணிகளில் முழு நேரம் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, குறிப்பிட்ட கால அளவிற்கு எடுக்கப்படுகின்ற திட்டங்களை முடிக்க வேண்டும் என்று **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய** உத்தரவிற்கிணங்க தொடர்ந்து களத்திற்கு சென்று மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பணிகளை நல்ல தரத்துடன் குறிப்பிட்ட காலத்தில் முடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், அதேபோல் மேற்கொள்ளப்பட இருக்கின்ற பணிகள் அந்த பணிகளால் அந்த பகுதி மக்களுக்கு நன்மைகள் ஏற்படும், அதேபோல் அந்த பகுதி மக்களுடைய அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படுமா என்று ஆராய்ந்து அந்த திட்டங்களையும் விரைவாக செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 2024-25ஆம் ஆண்டு அறிவித்த அறிவிப்புகளின் திட்டங்களை செயல்படுத்தும் வகையிலும் 5 சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திட்டப் பணிகளை நேரடியாக கள ஆய்வு மேற்கொண்டு வருகின்றோம். முதல் பணியாக பெரம்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முல்லை நகர் பகுதியில் புதிதாக ஏற்கனவே தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வாரியத்திற்கு சொந்தமான 8 கிரவுண்டு நிலப்பரப்பில் சமுதாயக்கூடம் 50

ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு முழுவதுமாக இந்த பகுதியில் புதிதாக திருமண மண்டபம் போன்றவை கட்டுவதற்குண்டான ஆய்வினை மேற்கொண்டோம். அதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கும் பட்சத்தில் அது ஏற்கனவே அறிவிக்கப்பட்ட வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் இருப்பதால் அந்த பணிகளை உடனடியாக மேற்கொள்வதற்கு சம்மதம் தெரிவித்து இருக்கின்றோம்.

அதை தொடர்ந்து, ஆர். கே. நகர் பகுதியில் ஒரு பெரிய விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர் திரு.எபினேசர் அவர்கள் கோரிக்கையும் நேரடியாக சென்று இன்றைக்கு கள ஆய்வு செய்தோம். அதிலும் கிட்டத்தட்ட சுமார் 10 கிரவுண்டுக்கு மேலாக இடம் இருக்கின்றது, சென்னை பெருநகர மாநகராட்சியினுடைய வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., அவர்களும் இந்த ஆய்வுப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள். அதற்கும் சாத்திய கூறுகள் இருப்பதால் அந்த பணியையும் விரைவாக மேற்கொள்வதற்கு ஒப்புதல் அளித்திருக்கின்றோம். மூன்றாவதாக திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே பி சங்கர் அவர்களும், மண்டல குழு தலைவரும் இருவரும் வைத்த கோரிக்கை ஏற்று திருமண மண்டபம் ஒன்று கட்டுவதற்குண்டான இடத்தை ஆய்வு செய்தோம். சென்னை பெருநகர மாநகராட்சியின் சொந்தமான இடம், அந்த இடத்திலும் கட்டுவதற்குண்டான சாத்திய கூறுகள் இருப்பதால் அதற்கும் ஒப்புதல் அளித்து இருக்கின்றோம்.

நான்காவதாக மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் அன்பிற்கினிய அருமை அண்ணன் திரு.எஸ்.சுதர்சனம் அவர்கள் வைத்த கோரிக்கைக்கு ஏற்ப இந்த பகுதியில் ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு சமுதாயக் கூடத்தை வறுமை கோட்டிற்கு கீழே வசிக்கின்ற மக்கள் பயன்படுகின்ற அளவிற்கு கட்டித் தர வேண்டும் என்று கேட்டு கொண்டு இருந்தார், அதையும் தற்பொழுது துறையோடு ஆய்வு செய்து இருக்கின்றோம், சாத்திய கூறுகள் இருப்பதால் இந்த திட்டத்தையும் இந்த ஆண்டு எடுத்துக் கொள்வதற்காக ஏற்கனவே அறிவிப்பில் உள்ள திட்டம் என்பதால் வடசென்னை வளர்ச்சி பகுதியிலே இருக்கின்ற திட்டத்தால் இதையும் செயல்படுத்த இருக்கின்றோம்.

இதைத்தொடர்ந்து வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.வெற்றி அழகன் அவர்கள் வைத்த கோரிக்கைக்கு ஏற்ப அவர் ஒரு பூங்கா கேட்டிருக்கின்றார் அதையும் ஆய்வு செய்ய இருக்கின்றோம். அந்த வகையில் இன்றைய ஆய்விலே நம்முடைய வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அன்பிற்கினிய டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் அன்பிற்கினிய திரு.ஆர்.டி.சேகர் அவர்கள், அதேபோல் நம்முடைய திரு.எபினேசர் அவர்களும், இந்த தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர் மாவட்ட செயலாளர் அருமை அண்ணன் திரு.எஸ்.சுதர்சனம் அவர்களும், பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் அவர்களும் பங்கேற்று உள்ளார்கள். தொடர்ந்து இந்த ஆய்வுப் பணிகள் மேற்கொள்வதால் கிடைக்கப்பெறுகின்ற நன்மைகளின் திட்டங்கள் விரைவாக செயல்படுத்தவும், ஏற்படுத்தப்படுகின்ற கட்டமைப்புகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உகந்த வகையிலும் அமைப்பதற்கு பேருதவியாக இருப்பதால் இந்த ஆய்வுகளை **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்** உத்தரவுப்படி தொடர்ந்து செயல்படுத்தப்படும். இவ்வாறு மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் அவர்கள், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையர் திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஆர்.டி.சேகர் அவர்கள், திரு.எபினேசர் அவர்கள், எஸ்.சுதர்சனம் அவர்கள், திரு.வெற்றி அழகன் அவர்கள், சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.அ.பாலசுப்பிரமணியன், திரு.நா.ரவிக்குமார், கண்காணிப்பு பொறியாளர் திரு.பா.ராஜ மகேஷ்குமார், மண்டலக் குழுத் தலைவர்கள் திரு.நேதாஜி கணேசன், திரு.தனியரசு, திரு.கூ.பி.ஜெயின், மண்டல அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் ஃபரிதா பானு, விளாங்காடுபாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.பாரதி சரவணன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளை சேர்த்த திரு.புழல் நாராயணன், திரு.சரவணன் ஆகியோர் உடனிருந்தனர்.